# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 0400/2016

ஆணை எண்: 141 /2016

நாள்: 19/08/2016

திரு.சிவ.இராஜாராமன்,
41, கல்மடம் தெரு,
நத்தம் , திண்டுக்கல் மாவட்டம்–623 601 – மனுதாரர்

செயல் அலுவலர்,
நத்தம் பேரூராட்சி,
நத்தம் அஞ்சல்,
திண்டுக்கல் மாவட்டம் –623 601 – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சி, 5வது வார்டு உறுப்பினர் திரு.சிவ. இராஜாராமன், அவர்களின் 05.05.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு 400/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் பேரூராட்சியில் உள்ள திரு.சிவ.இராஜாராமன், (5வது வார்டு உறுப்பினர்) தனது 05.05.2016 நாளிட்ட புகார் மனுவில் தனது தாத்தாவிற்கு சொந்தமான சொத்து நத்தம் டவுன் வேலம்பட்டியில் சர்வே எண். 180/6 கதவு எண்.63, 63A பழைய கதவு எண். 125 சம்பந்தமாக வழக்கு கடந்த 1983 முதல் இன்றுவரை நடைபெற்று வருகிறது என மனுதாரர் தனது

முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். மேலும், சொத்து வரிவிதிப்பு தாத்தாவின் பெயரில் இருந்து வந்ததாகவும், நத்தம் பேரூராட்சியில் மோசடியாக சொத்து வரிவிதிப்பு பெயர் மாற்ற உத்தரவு செய்யப்பட்டதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2. மேற்படி சொத்துவரி பெயர் மாற்றம் செய்தது தொடர்பாக ஆட்சேபணை மனு கொடுத்ததாகவும், சொத்துவரி பெயர் மாற்ற பதிவேட்டில் உத்தரவு செய்யும் அதிகாரி கையொப்பம் இல்லை என்றும், கிரயம் பெறப்பட்டுள்ளதாக கூறப்படும் சொத்திற்கு வில்லங்கச் சான்று பெறாமலே பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை பார்த்தால் விதிமீறல்கள் நடைபெற்றுள்ளதாக தெரிகிறது என மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

3. புகார் மனுமீது செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரப்பட்டது. செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் மேற்கூறப்பட்ட சொத்து தாத்தாவிற்கு சொந்தமான சொத்தாக இருந்து வருகிறது என்று கூறுவதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும் சொத்து குறித்து வழக்கு நடைபெறுகிறது என்றும் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், செயல் அலுவலர் விளக்க அறிக்கையில், மேற்கூறப்பட்ட சொத்தில் பெயர் மாற்ற உத்தரவு மற்றும் ஆட்சேபணை மனு அளித்தது, அவதூறாக பேசியது, முறைகேடுகள் செய்தது, சொத்து வரி பெயர் மாற்ற பதிவேட்டில் உத்தரவு செய்யும் அதிகாரி கையொப்பமே இல்லை என்றும் வில்லங்க சான்று இல்லாமல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது ஆகிய அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யான குற்றச்சாட்டுகள் என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

5. மேற்கூறப்பட்ட சொத்திற்கு 03.08.1981–ம் வருடம் மனுதாரர் தந்தை சிவந்தி செட்டியாரிடம் கிரயம் பெற்று சொத்துவரி பெயர் மாற்றம் செய்து பெரிய கருப்பன் உத்தரவு பெற்றுள்ளதாகவும் 2014–2015 வரை வரிவிதிப்பு பெயர் மாற்றம் பெரிய கருப்பன் பெயரிலும், மேற்கூறப்பட்ட வீட்டிற்கு குழாய் இணைப்பு மட்டும் சிவந்தி செட்டியார் பெயரிலும் இருந்து வந்துள்ளதாக செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் உரிய சான்றாவணங்களுடன் பெரிய கருப்பன் வாரிசுதாரர்கள் தங்கள் பெயருக்கு மாற்றம் அளிக்க விண்ணப்பித்தனர் என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

6. மேலும், வரிவிதிப்பு பெயர் மாற்றம் செய்தது தவறு என நீதி பேராணை மனு எண். WP(MD)No.3505/2016–ல் மனுதாரர் சகோதரர் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், இப்பெயர் மாற்றம் குறித்து இப்பேரூராட்சிக்கு எதிராக எந்த ஒரு வழக்கிலும் நீதிமன்ற தீர்ப்புரை பிறப்பிக்கப்படவில்லை எனவும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இதனை மனுதாரர் 08.08.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தின் முன் நடந்த விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

7. மேற்கூறிய நிலையில், சொத்தின் உரிமை குறித்து நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் பிரிவு 10(3) (b)–ன் படி இந்நிகழ்வின் பொருட்பாடுகள் இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணைக்கு தற்போது உகந்தது இல்லை என்று கருதப்படுகிறது. அவ்வாறே இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

2016–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஓம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்:

1. திரு.சிவ.இராஜாராமன்,
   41, கல்மடம் தெரு,
   நத்தம் , திண்டுக்கல் மாவட்டம் –623 601

2. செயல் அலுவலர்,
   நத்தம் பேரூராட்சி,
   நத்தம் அஞ்சல்,
   திண்டுக்கல் மாவட்டம் –623 601